**சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளை பரீட்சித்தல் கட்டணம் மற்றும் தொழிநுட்ப தொடர்பாடல் நிதியம் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளை பரீட்சித்தல் கட்டணம் மற்றும் தொழிநுட்ப தொடர்பாடல் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் அரசியலமைப்புடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப்

பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர், கொடுப்பனவு வவுச்சர் முதலிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுதல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

.

### 1.5.2 கணக்கீட்டு கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன் பட்டோரின் நிலைத்திருத்தன்மை மற்றும் ஆயுட்காலம் தொடர்பாக கருத்திற் கொள்ளப்படாமல் ஐயக் கடனிற்காக 5 சதவீத பொது வீதத்தின் ஊடாக ரூபா 4,875,963 ஆன ஐயக் கடன் ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஐயக் கடனிற்காக 5% ஆன பொது வீதமொன்று 2018 ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்தப்படுகின்றது. | கடன் பட்டோரிடமிருந்தாக அறவிடல்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு ஐயக் கடனிற்காக ஒதுக்க வீதமொன்று நிர்ணயிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1967 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 75 நிறுவனங்களினால் இலங்கை சுங்கத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 253,314 ஆன பணம், வெளி முதலீடுகளில் ஈடுப்படுத்தலின் ஊடாக ஈட்டப்பட்டிருந்த வட்டி வருமானமான ரூபா 13,619,369 உடன் மொத்த முதலீடு ரூபா 13,872,683 ஆக காணப்பட்டது. இந்த நிறுவனங்களின் நிலைத்திருத்தன்மை போன்று நிகழ்காலத்தில் சேவை வழங்கல் தொடர்பாக எந்தவொரு புலனாய்வுகளும் மேற்கொள்ளப்படாது குறித்த மீதி பொறுப்புக்கள் மற்றும் முதலீட்டின் கீழ் கணக்குகளில் முன்கொண்டு வந்திருந்தது. | இந்த நிறுவனங்களுள் பலவற்றின் நிகழ்கால முகவரிகள் இல்லாததுடன் சில நிறுவனங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த நிறுவனத்தின் பெயரில் உள்ள வைப்பு மீதி அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கான திறன் குறித்து தேசிய சேமிப்பு வங்கியிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. அவ் பதிலின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | நிகழ்காலத்தில் சேவை வழங்கல் மற்றும் நிறுவனங்களின் நிலைத்திருத் தன்மை குறித்து புலனாய்வு செய்யப்பட்டு முறையான கணக்கு வைப்பு மேற்கொள்வதற்கு அல்லது தேவையேற்படின் வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 19 திகதிய 3/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அனைத்து அரச நிறுவனங்களும் தமது வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்வதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரத்தினை பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் இலங்கை சுங்கத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள் எவரும் அத் தேவையினை நிறைவேற்றாதிருக்கையில், மீளாய்வாண்டிற்காக ரூபா 850,149,598 ஆன தொகை மேலதிக நேர கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பாராளுமன்ற கணக்குகள் செயற்குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட புலானாய்வுகளின் பிரகாரம் தேவையான முன்மொழிவு மற்றும் நடைமுறையை தயாரிக்கப்படுவதற்காக உப குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அவ் உப குழு அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அரச துறையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தொடர்புடைய பொது சுற்றறிக்கைகள் பிரகாரம் சுங்க பதவியணியும் செயற்படல் வேண்டும். |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 பந்தியின் ஊடாக நிதி பிரமாண கோவைக்கு உள்ளடக்கப்பட்ட நிதி பிரணமானம் 876(2) (ஈ) பந்தி | மேலதின நேர நிதியத்தினுள் திறைச்சேரி நிதியாக ரூபா 2,133,975,331 ஆன தொகை நீண்ட காலம் தொடக்கம் திரண்டு காணப்படினும், ஏற்பாடுகளின் பிரகாரம் திறைச்சேரியுடன் கலந்துரையாடப்பட்டு அம் மிகைத் தொகையினை மீளாய்வாண்டில் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கில் பெயரளவில் காணப்படுகின்ற ரூபா 2,133,975,331 ஆன திரண்ட பணம் மிகை பணமாக குறிப்பிடப்பட்டிருப்பினும் இந்த மீதி பௌதீகமாக திணைக்கள கணக்கில் காணப்படாததுடன் காணப்படுகின்ற முறைமையின் பிரகாரம் ஏற்கனவே திறைச்சேரி பிரதி செயலாளரின் வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் திரண்டு காணப்படுகின்ற மிகை பணம் திறைச்சேரியுடன் கலந்துரையாடப்பட்டு ஒருங்கிணைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 141,774,897 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 55,141,127 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 86,633,770 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டினுள் மேலதிக நேரக் கொடுப்பனவு வருமானம் வீழ்ச்சியடைதல் பிரதான காரணமாகியிருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றுத் செலவு விடயங்களில் போக்குப் பகுப்பாய்வு.

சுங்க கட்டளை சட்டத்தின் 103 பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட 2007 ஒக்தோபர் 26 திகதிய மற்றும் 1520/17 ஆம் இலக்க வர்தமானி அறிவித்தலின் பிரகாரம், உத்தியோகத்தர்களினால் வழமையாக கடமை நேரத்திற்கு புறம்பான நேரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கடமைக்காக மற்றும் வழமையான கடமை நிலையங்களுக்கு புறம்பான இடங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளுக்காக அதற்கு தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டனம் மற்றும் அறவீடுகள், இலங்கை முதலீட்டுச் சபைக்கு தொழிநுட்ப சேவை வழங்குவதற்காக அந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்களும் நிதியத்திறகு வரவு வைக்கப்படல் வேண்டும். அவ்வாறே, மேலதிக கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் இந்த நிதியத்தின் செலவின சுமையாக கருதப்படுகின்றது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் மேற் கூறப்பட்ட பிரகாரம் மேலதின நேர வேலை, கப்பல் சரக்குகள் பரிசோதித்தல் மற்றும் தகவல் தொழிநுட்ப நடவடிக்கைகள் மற்றும் நானாவித பெறுவனவுகளுக்காக முறையாக ரூபா 788,633,867, 304,718,986 மற்றும் ரூபா 14,976,000 சேர்க்கப்பட்டிருந்தது. அப் பணிகளில் ஈடுப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு முறையாக மேலதிக கொடுப்பனவு வருமானத்தில் 107.8 சதவீதமாக ரூபா 850,149,597ஆன தொகையும், கப்பல் சரக்கு பரிசோதனை வருமானத்திலிருந்து 50 சதவீதமாக ரூபா 152,359,493 ஆன தொகையும் தகவல் தொழிநுட்ப வருமானத்தில் 80 சதவீதமாக ரூபா 11,980,800 ஆன தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி கொடுப்பனவு செயற்பாட்டினுள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேலதிக நேர வேலை நிதியத்தின் கொடுப்பனவு முறையான கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படாமை கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டிருப்பினும், இந்த நிலை முறைப்படுத்துவதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நேர வேலை நிதியத்தின் பெறுவனவு மற்றும் செலுத்தல் 1520/17 ஆம் இலக்க 2007 ஒக்தோம்பர் 07 திகதிய வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் மற்றும் திணைக்கள கட்டளை DOPL 218F இற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றதுடன் சுங்க பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மேலதிக நேர வேலை குழுவின் ஊடாக காலக்கிரமத்தில் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பாக மீளாய்வு செய்யப்படுகின்றது. | நிகழ்கால மேலதிக நேரக் கொடுப்பனவு செயற்பாடு மீளாய்வு செய்யப்பட்டு முறைமையாக்கப்படல். |
| (ஆ) ஆண்டினுள் சேர்க்கப்பட்ட மேலதிக நேர வருமானத்தினை மிகைத்து ரூபா 61,515,730 ஆன மேலதிக நேர செலவினமாக உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். மேலதின நேர வேலை நிதியத்திற்கு அறவிடப்படுகின்ற மேலதிக நேர வீதங்கள் தீர்மானிக்கப்பட்டிருப்பதாவது, 1520/17 ஆம் இலக்க மற்றும் 2007 ஒக்தோபர் 07 திகதிய வர்த்தமானி பத்திரிகைக்கு பிரகாரமாகும். பல ஆண்டுகள் கடந்திருப்பினும் இந்த அறவிடல் வீதங்கள் இது வரையில் திருத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் பின்னர் | ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த மேலதிக நேர வேலை முன்மொழிவு முறைமை செயற்படுத்தப்படுவதற்காக நிதி பெற்றுக் கொள்ளப்படுவது சுங்கத்தினால் சேவை வழங்கப்படுகின்ற வெளி நிறுவனங்களினால் ஆகும். அவ் வெளி |

| | | |
|---|---|---|
| | காணப்படுகின்ற வாழ்கைப்படி அதிகரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் சம்பளம் திருத்தங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுகின்ற மேலதிக நேர கொடுப்பனவு வீதங்கள் இரண்டு சந்தர்ப்பத்தில் திருத்தப்பட்டுள்ளது. அக் காரணத்தினால் மேலதிக நேர கொடுப்பனவு செலவினம் அதிகரித்துள்ளது. | நிறுவனங்களிடமிருந்து சேர்க்கப்படுகின்ற நிதியினை மிகைத்து கொடுப்பனவு மேற்கொள்ளாமைக்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மேலதிக நேர வேலை வருமானமாக ரூபா 788,633,867 சேர்க்கப்பட்டிருப்பினும், அந் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் ரூபா 848,752,697 ஆக காணப்படுகின்றமையினால் மீளாய்வாண்டினுள் மேலதிக நேர வேலை நிதியத்தின் பற்றாக்குறை ரூபா 141,774,896 ஆக காணப்பட்டது. அப் பற்றாக்குறை தீர்க்கப்படுவதற்காக கடந்த ஆண்டினுள் நிதியத்தில் காணப்பட்ட திரண்ட மீதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. இந்த பற்றாக்கறை ஏற்பட்டமை குறித்து 2018 ஒக்தோபர் 01 ஆம் திகதி தொடக்கம் மணித்தியாலத்திற்கு செலுத்தப்படுகின்ற மேலதிக நேர கொடுப்பனவு 50 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை காரணமாகியிருந்ததுடன் இந்த மேலதிக நேர கொடுப்பனவிற்காக மட்டும் உள்ளக குழுவொன்றின் தீர்மானம் பெறப்பட்டிருப்பினும் இதற்காக குறித்த அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதியத்தின் பற்றாக்குறை கடந்த ஆண்டினை பார்க்கிலும் ரூபா 86,633,770 இனால் அதிகரித்திருந்தது. | மேலதிக நேர வேலை நிதியத்திற்கு வீதங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்தது, 1520/17 ஆம் இலக்க மற்றும் 2007 ஒக்தோபர் 07 திகதிய வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரமாகும். பல ஆண்டுகள் கடந்திருப்பினம் இந்த வீதங்கள் இதுவரையில் திருத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், பின்னர் காணப்படுகின்ற வாழ்கைப்படி அதிகரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் சம்பளம் திருத்தங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுகின்ற மேலதிக நேர கொடுப்பனவு வீதங்கள் இரண்டு சந்தர்ப்பத்தில் திருத்தப்பட்டுள்ளது. அக் காரணத்தினால் மேலதிக நேர கொடுப்பனவு செலவினம் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், தற்போதும் மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்படுவது நிதி அமைச்சின் சிரேஸ்ட உதவி செயலாளரின் மு1/ரேகு/47/3 ஆம் இலக்க 2004.02.09 திகதிய கடிதத்தின் ஊடாக அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படையுடைய வீதத்தினை பார்க்கிலும் குறைந்த வீதத்திற்காகும். | மேலதிக நேர வேலை நிதியத்தின் பெறுவனவினை மிகைத்து செலுத்தல்கள் மேற்கொள்ளல் தொடர்பாக முகாமைத்துவதற்தின் கடும் கவனம் செலுத்தப்பட்டு மேலதிக நேர கொடுப்பனவு முறைமை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளை பரீட்சித்தல் மற்றும் சுங்க தகவல் மற்றும் தொடர்பாடல் நிதியத்தின் ஒருங்கிணைந்த நிதி நிலைக் கூற்று 2019 ஆம் ஆண்டின் திரண்ட நிதியத்தின் மீதி மற்றும் நடைமுறையல்லாத பொறுப்பு மீதி முறையாக ரூபா 2,133,975,332 மற்றும் 13,872,683 ஆக காண்பிக்கப்பட்டிருப்பினும் அப் பெறுமதி ரூபா 2,275,913,245 மற்றும் 13,330,735 என அவதானிக்கப்பட்டது. | இது அச்சு பிழையாவதுடன் நிதியத்தின் ஒருங்கிணைந்த நிதி நிலைமை கூற்றின் 2019 ஆம் ஆண்டின் திரண்ட நிதியத்தின் மீதி மற்றும் நடைமுறையல்லா பொறுப்பு மீதி முறையாக ரூபா 2,275,913,245 மற்றும் 13,330,735 ஆகும். | கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |